**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச்- 2018
# Term Examination, March - 2018

| தரம் :- 13 (2018) | இந்து சமயம் | Gs,spj;jpl;lk |
|---|---|---|

## பகுதி – I

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 3 | 11. 3 | 21. 1 | 31. 4 | 41. 5 |
| 2. 5 | 12. 2 | 22. 3 | 32. 3 | 42. 3 |
| 3. 4 | 13. 5 | 23. 4 | 33. 4 | 43. 5 |
| 4. 4 | 14. 2 | 24. 2 | 34. 5 | 44. 3 |
| 5. 4 | 15. 4 | 25. 5 | 35. 4 | 45. 4 |
| 6. 4 | 16. 2 | 26. 3 | 36. 3 | 46. 1 |
| 7. 4 | 17. 1 | 27. 2 | 37. 4 | 47. 2 |
| 8. 5 | 18. 4 | 28. 2 | 38. 3 | 48. 3 |
| 9. 5 | 19. 4 | 29. 2 | 39. 4 | 49. 4 |
| 10. 5 | 20. 5 | 30. 4 | 40. 3 | 50. 1 |

[50X1=50 புள்ளிகள் ]

## பகுதி – II

*1)* **“அ”**

i. தை 1ம் திகதி
உத்தராயண கால ஆரம்பம்
சூரியப்பொங்கல்
மகரசங்கிராந்தி (2 புள்ளி)

ii. முதல் நாள் வீடுகளை துப்பரவு செய்தல்.

- அதிக காலையில் துயில் விட்டு எழும்புதல் நீராடுதல். புத்தாடை அணிதல்
- சாணகத்தால் மெழுகுதல், புது அடுப்பு வைத்தல். நிறைகுடம் வைத்தல், வாசலில் கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், புதுப்பானையின் கழுத்தில் வாழைநாரில் மாவிலை.
இஞ்சி இலை மஞ்சள் இலை பூமாலை கொண்டு அலங்கரித்தல் பால் இட்டு பொங்கல் இடல் பொங்கும் போது ‘பொங்கலோ பொங்கல்’ எனக் கூறல்.
- வீட்டில் சிற்றூண்டி பழவகையுடன் சூரியனுக்கு படைத்து தோத்திரப் பாடல் பாடி வழிபாடு செய்தல், பெரியோர் ஆசி பெறல், ஆலயம் செல்லுதல். (10 புள்ளி)

iii. உழவர்கள் உணவு உற்பத்திக்க தேவையான மழை, வெப்பம், வெளிச்சம் வேண்டியும்.

- நாடு செழிக்கவும்.
- நோய் இன்றி சிறப்பாக வாழ்தல் என்பனவாகும்.
- அன்பு, கருணை, நன்றியுணர்வு, சகோதரத்துவம், மன்னித்தல், கடவுள் வழிபாடு போன்ற பண்பாட்டு கூறுகள் வளர்க்கப்படும். (8 புள்ளி)

agaram.lk

2)

i. வேதம்

நாலாயிரம் திவ்விய பிரபந்தம், இதிகாசங்கள், பிரஸ்தான திரயங்கள் (3 புள்ளி)

ii.

| சங்கரர் | இராமனுஜர் |
|---|---|
| உண்மை பொருள் ஒன்று | மூன்று பொருளும் உண்மை |
| விவர்த்தவாதம் (விளக்கம்) | ஈஸ்வரன் தான் மேலானது |
| சகுணப்பிரமம், நிர்க்குணப்பிரமம் | பரிணாமவாதம் (விளக்கம்) |

(8 புள்ளி)

iii.

| | |
|---|---|
| உலகம் | உண்மையானது |
| உண்மையில்லை | (பரிணாம வாதம்) |
| கயிறு பாம்பாகத் தெரிதல் | சரீரசரீரி (விளக்கம்) |
| (விவாத்தவாதம்) | |

(5 புள்ளி)

iv. ஆன்ம இலட்சியம் :-

மோட்ச நிலையில் ஆன்மாவும் பிரமாவும் ஒன்று வேறு அல்ல ஸ்ரீவைகுண்டத்தை அடைதல்

| | |
|---|---|
| ஞானம் | ஆன்மா, பிரம்மம் |
| கர்மம் | பிரபக்தி, தர்மபூதஞானம் |
| ஜீவனமுத்தி | விதேகமுத்தி |

(4 புள்ளி)

3)

i. வாமதந்திரங்கள், சகலகலாவல்லிமாலை, கனகதாரா தோஸ்திரம் கேன உபநிடதம் லிங்கபுராணம், பாகவத புராணம், மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், அபிராமி அந்தாதி, லலிதா சகஸ்ரநாமம், சரஸ்வதி அந்தாதி, சௌந்தர்யலகரி. (3 புள்ளி)

agaram.lk

ii. சிந்துவெளி தொல்பொருள் வெளிப்படுத்திய ஆதாரங்கள் வேதகாலப் பெண் தெய்வ வழிபாடு ஆகமங்கள் உபநிடத சிந்தனைகள், புராணக் கதைகள், மகாபுராணம் கூறும் கருத்துகள், சங்ககால நிலவழிபாட்டில் பாலைநிலத் தெய்வமாக விளங்கியமை. பல்லவர் காலத்தில் சிவ வழிபாட்டுடன் இணைந்து கொண்டமை. தேவாரத் திருமுறைகளில் சக்தி பற்றிய கருத்துக்கள் சிவாலய வழிபாடுகளில் சக்திக்கு முக்கியத்துவம் சோழர் காலத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கப்பட்டது. நாயக்கர் காலத்திலே மேலும் வளர்ச்சி பெற்றது. பிற்காலத்தின் சரக்தசமயத்தின் நிலை. (6 புள்ளி)

iii. ஆகம நெறி சார்ந்த வழிபாடு, ஆகம நெறி சாராத வழிபாடு என இரு வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றது.

மந்திரம்
தந்திரம்
யந்திரம்

என்பன சக்தி வழிபாட்டில் உபாசனை முறைகளாகும்.

விரதங்கள் - மங்களவாரம், வரலட்சுமி விரதம், சுவர்ணகௌரி விரதம், சுமங்கலி பூஜை. (5 புள்ளி)

iv. சைவ சமயத்துடன் இணைந்து காணப்படுதல் சிவசக்தி, தத்துவம் புராண மரபுகளில் காணப்படுதல். விரத வழிபாடுகளின் செல்வாக்கு, நாட்டுபுற வழிபாடுகளில் பெண் தெய்வங்களின் முக்கியத்துவம் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய மேற்காசிய நாடுகளிலும் சக்திக்குரிய கோயில்களின் எழுச்சி. (6 புள்ளி)

4) காலம் :- கி.பி 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ம் நூற்றாண்டு வரையுள்ள காலம் பல்லவர் காலம் எனப்படும்.

சூழ்நிலை :- சைவம், வைணவ சமயங்கள் வளர்ச்சி பெற்றிருந்த காலம்.

- சமணம் பௌத்தம் செல்வாக்கு இழந்த காலம்.
- பக்தி இயக்கத்தினை ஊடாக இறை இருப்பை நிலை நிறுத்திய காலம்
- பல்லவ மன்னர்களால் முதன்முதலாக அழியாத பொருட்களைக் கொண்டு ஆலயங்கள் அமைக்கப்பட்ட காலம்.
- பல்லவர் கால மன்னர்களான மகேந்திர வர்மன், மாமல்லன் இராஜசிம்மன், நந்தி வர்மன் முதலானவர்கள் முறையே குடைதளி மலைத்தளி கட்டுத்தளி முறையிலான ஆலயங்களை காட்டினார்கள்.

குடைத்தளி :- மகேந்திர வர்மன் முதன்முதலில் பல்லவர் காலத்தில் கட்டக்கலையில் குடைத்தளி. முறையில் ஆலயங்களை கட்டுகின்ற முறையிலான தொடங்கி வைத்தான்.

உதாரணமாக –

மண்டகப்பட்டு மகேந்திரபாடி மாமண்டூர் பல்லாவரம் சியமங்கலம், திருச்சிராப்பள்ளி, தளவானூர் போன்ற இடங்களிலுள்ள குடை வரைக் கோயில்களை குறிப்பிடலாம். குடைதளிகளை – முகப்பு மண்டபத்தைக் கொண்டமை.

7’ உயரமும் 2’ அகலமும் கொண்ட தூண்கள் இடம் பெறுகின்றன.

மலைதளிகள் - மலைதளிக் கோயில்கள் மாமல்லனால் அமைக்கப்பட்டவை.

உ – ம் மாமல்ல புரத்திலுள்ள பஞ்சபாண்டவர் ரதங்கள் குறிப்பிடலாம்.

தர்மராஜ ரதம் மூன்று தளங்களையும் சிற்ப வேலைப்பாடுகளையும் கொண்டது.

கட்டுத்தளி / கற்றளி – கட்டுத்தளி முறையில் ஆலயங்களை அமைக்கும் முறையே முதன் முதலில் தோற்றுவித்தவன் இராஜசிம்மனாவான்.

உ – ம் மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில், காஞ்சிபுரத்திலுள்ள கைலாச நாதர் கோயில், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் சிறப்பானவை.

முக்கியத்துவம் - காஞ்சியிலுள்ள முத்தீஸ்வர கோயில் மதங்கேதீஸ்வரர் கோயில் செங்கற்பட்டு உரகடத்திலுள்ள வாடாமல்லீஸ்வரர் கோயில் திருத்தணியிலுள்ள வீரட்டானேஸ்வரர் கோயில், நந்தி வர்மம் கலைப்பாணியில் அமைக்கப்பட்டவை.

- பல்லவர் கால கடடக்கலை வளர்ச்சியில் கலை வேலைப்பாடுகளில் மிக உயர்ந்த திராவிட கலை வளர்ச்சியைக் கொண்டவை இராமசிம்மன் காலமாகும்.
- பல்லவர் காலக் கட்டக்கலையே பின்வந்த திராவிடக் கட்டக்கலை யாவற்றிற்கும் முன்னோடியாக அமைந்தது.

agaram.lk

- இறையகம், அந்தராளம், முக மண்டபம், பரிபாலர் தேவாலயம் சுற்றாலை முதலான அமைப்புக்கள் பெரிதும் வளர்ச்சியடைய இக்காலக் கட்டடக்கலையே முன்னோடியாக அமைந்தது.
- சோழர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் தூண்கள் விமானம், கோபுரம் பொதிகை என்பன பல மாற்றங்கள் பெற்று பெருவளர்ச்சியடைவதற்கு அடிப்படையாக அமைந்தது.
- குடைத்தளி, மலைத்தளி, கற்றளி காலந்தோறும் வளர்ச்சியடைவதற்கு பல்லவர் காலக் கட்டக் கலையே முன்னோடியாக அமைந்தது.
- கற்சிற்பங்களும், சுதைச் சிற்பங்களும் படிமங்களும் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த திராவிடக் கட்டடக் கலையே முன்னோடியாக அமைந்தது.

(20 புள்ளி)

## பகுதி – “ஆ”

5)

i. ஆன்மாவை பந்தித்து இருப்பவை – ஆணவம், கன்மம், மாயை

ii. இயல்பு - இருள்மலம், மூலமலம் என்பதன் விளக்கம், அநாதியானது. அளவில்லாத சக்திகளையுடையது. தன்னையும் காட்டாது. தான் பீடித்துள்ள ஆன்மாவையும் காட்டாது. செம்பிற்களிம்பு போல ஆன்மாவை பீடித்துள்ளது. (8 புள்ளி)
எண் குணங்கள் - விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை

iii. கன்மம் மறுபிறப்பு – கன்மம் என்பது வினை அல்லது செயல், மனம், வாக்கு, காயம், மூவகை கன்மம் பற்றிய விளக்கம் (சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம்)
பிறவிக்கு வித்து - இவற்றை சைவசித்தாந்த பாடலடிகள் மூலம் விளக்குதல் தோத்திரப் பாடல் மூலம் விளக்குதல். (8 புள்ளி)

agaram.lk

6) நாயன்மார்களின் காலச்சூழல் / வாழ்க்கை சுருக்கம்.

- காலம் (கி.பி 640 – 656)
- சோழ நாடு, சீர்காழி பதி, சிவபாதவிருதயார், பகவதி அம்மையார், ஆதிரை நன்நாளில் பிறந்தார், மூன்று வயதில் தேவாரம் பாடியமை. கிரியை நெறி, சற்புத்திர மார்க்கம், சாமீப மூர்த்தி , 16 வயதில் முத்தியடைந்தார்.

சைவசமயத்தை பொது மக்கள் மயப்படுத்தியமை.

- சம்பந்தர் தமது சமய பிரசங்கத்தினால் மன்னன் முதல் சாதாரண மக்கள் வரை பௌத்த மதங்களிலிருந்து மதம் மாறச்செய்தார். (கூன்பாண்டியன் மன்னனை மதம் மாற்றியமை)
- சமண பௌத்த மத வாதிகளுக்கு அனல் வாதம், புனல் வாதம் நிகழ்த்தி சைவ சமய உண்மைகளை நிலை நாட்டினர்.

அற்புதங்கள் தேவாரத்தின் மூலம் பல சமய சமூக கருத்துக்களை வெளிப்படுத்தியமை.

- இவர் 14 000 தேவாரங்களை பாடியுள்ளார் எனவும் இவற்றுள் நமக்கு கிடைத்துள்ள தேவாரங்களின் தொகை 4169 ஆகும். (யாழ்முரிப் பதிகம் பாடியமை)
- ஆலய வழிபாட்டின் அவசியத்தை வலியுறுத்தி தலையாத்திரை மேற்கொண்டு தலங்களின் பெருமையை (3வது முதல் 16ம் வரை 220 முதலான தலங்களின் பெருமை பற்றி பாடியுள்ளார்)

சமூகப் பணி.

- இவர் ஆற்றிய சமூகப் பணிகளில் பஞ்சம் தீர்த்தல்.
  ( "வாசி தீரேவே காசு நல்குவீர்…….."
  
  "இடரினும் தளரினும் ……….." )

- நோய் தீர்த்தல்

  "துணிவளர் திங்கள் ……."

  "அவ்வினைக்கு இவ்வினை ……"

இறந்தவரை உயிர்ப்பித்தல்

  "மட்டிட்ட புன்னை …….."

  "சடையாய் எனுமால் …"

இயற்கையை ஏவல் கொளல்

  "காரைநகர் கூகை முல்லை ……"
  பூத்தோர் தாயென கொண்டு …"

(20 புள்ளி)

7) அமைவிடம்

❖ திருகோணமலை நகரம்

ஆலய வரலாறு

❖ இராமணயத்தில் இராவணனுடன் தொடர்புடையது. (தாயாருக்கு சிவலிங்கம் பெற விரும்பி மலையை பிரிந்தமை. இராவண வெட்டு சிறப்பிற்குரியவை). கி.மு 308ல் திகழ்ந்த கடற்கோளினால் மூழ்கி விட்டதாக ஆய்வாரள் குறிப்பிடுகிறார். கோயிலின் உரு பகுதி சமுத்திரன் அடியில் உள்ளது. என ஆழ்கடல் ஆய்வில் 1961ல் ஆய்வாளர் மைக்வில்சன் கூறுகின்றார்.

❖ புதிதாக 7ம் நூற்றாண்டில் இவ்வாலயம் தோற்றுவிக்கப்பட்டது. திருப்பணிக்கு குளக்கோட்ட மன்னன் உதவி செய்தமை. 1624 போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டமை.

- இறைவன் - கோணஸ்வரநாதர்
- இறைவி – மாதமை அம்மன்
- தலவிருட்சம் - கல் - ஆலமரம் (நேர்த்தி வேண்டி துணியில் நாணயம் முடிந்து விட்டு செல்வது வழக்கம்)
- தீர்த்தம் - பாவநாசம்
- மறுபெயர் - தட்சண கைலாயம், திருமலை, தென் கைலாயம், கோகர்ணம், திரிகூடம்
- பாடல் பெற்ற தலம் - திருஞான சம்பந்தர், அருணகிரிநாதர்.
- தினமும் ஆறுகால பூசை நடைபெறுகின்றது.
- பங்குனி உத்தரத்தில் தொடங்கி 18 நாட்கள் மகோற்சவம் நடைபெறும் 2003ம் ஆண்டு முதல் தேர்விழா இடம் பெறுகின்றது. மூன்று இரதங்கள் பவனி வருகின்றன. மகா சிவராத்திரி சிறப்பாக கொண்டாடப்படும் அதனை விட சிவனுக்குரிய திருவாதிரை ஆனி உத்தரம் போன்ற தினங்களில் விசேட பூஜைகளும் இடம் பெறுகின்றன.

❖ அறிய உதவும் நூல்

- தட்சிணகைலாய புராணம்
- திருக்கோணேச்சர புராணம்
- சீர்பாகுதல் புராணம்
- மட்டக்களப்பு மான்மியம்

agaram.lk

❖ ஆலய மீது எழுந்த நூல்கள்

- திருகோணேச்சர ஆலய வரலாறு.
- திருக்கோணமலை கோணகரிசீர் அட்டகம்.
- திருகோணமலை அந்தாதி
- தற்போது ஆலயமுன் பகுதியில் பெரியாளவான சிவபெருமான் திருவுருச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பம்சமாகும்.

(20 புள்ளி)

8) சிறு குறிப்பு

i. நாகதம்பிரான் வழிபாடு.

தோற்றம் - தொன்மம் பற்றிய கருத்தியல்.

அ) ஆதிஷேசன்

ஆ) அனந்தன்

இ) பலராமன் சேஷநாசனின் அவதாரம்.

நாட்டார் மரபியல்

அ) ஐந்து பெண்களுடன் ஒரு – பாம்பு உடன் பிறத்தல். மூன்று பெண்களுடன் ஒரு – பாம்பு பிறத்தல்.

வரலாறு – சிந்துவெளி முத்திரைகளில் பாம்பின் வடிவங்கள்
வேதங்களில் பாம்பு அஹி என அழைக்கப்படும்.

யசுர் வேதம் கரு பாஞ்சாலத்தில் தொடுக்கப்பட்டது. பஞ்சாலத்தின் தலைக்கரம் அஹிச்சந்திரன் அப்பகுதி மக்களின் குலதெய்வம் ஆதிநாகம் ஆகும்.

☞ சிருஹய சூத்திரத்தில் மூன்று உலகிற்கும் நான்கு திசைகளுக்கும் தெய்வமாக நாகர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

☞ நித்தேஸ என்றும் பௌத்த கால நாக வழிபாடு பற்றிக் குறிப்பிடும்.

☞ கணிஷ்கறுடை பட்டயங்களில் நாக வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

☞ நாகம் வைதீக தெய்வங்களின் வாகனமாகவும் அணிகலமாகவும் விளங்குகின்றது.

☞ சிற்பம், ஓவியம், படிமம் முதலானவற்றின் பொருள் மரபாகவும் விளங்குகின்றது.

பொதுவான நம்பிக்கை – நாகத்தை வழிபடுவதன் மூலம் விஸ்ணுவின் வராக அவதாரத்தின் பலத்தைப் பெறலாம்.

☞ இறந்தவர்களின் ஆவியாக நாகங்கள்

☞ பூட்டப்பட்டிருக்கும் செல்வங்களை நாகங்கள் பாதுகாக்கின்றன.

☞ நாகதோஷம், பிள்ளைப் பேற்றுக்குத் தடையாக அமைவது

☞ புலன்களை அடக்கி வாழ வழி காட்டுவது.

வழிபடும் முறை – ஆகமம் - சிற்ப சாத்திர நெறி சார்ந்தது.

ஆகமம் - (சிற்ப சாத்திர நெறி சாரததது நாட்டார் மரபு)

வழிபடும் இடங்கள் - யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை (புனார் - புளியம் பொக்கனை, வன்னி நாகர் கோயில், நவாலி, செம்பியன்பற்று பண்டரா வெளி, களுவாக் கேணி, சேனையூர், திருமலை, மல்லாகம்)

agaram.lk

சடங்கு :- வழிபடும் முறை
விளக்கு வைத்தல்
பிரம்பு வழங்கல்
பண்டம் எதிர்கொள்ளல்
பொங்கல் - மூன்று வளர்ந்து வைத்துப் பொங்குதல்.
மடை பரவுதல்

நேர்த்திகள் - தோஷம் நீங்கற் பொருட்டு உலோகத்தில் செம்பாம்பு , கரும்பாம்பு கொடுத்தல், முட்டை பால், பழம் வழங்கல், அலகு போடுதல், காவடி எடுத்தல்.

குறிப்பு :- தோற்றம், வரலாறு முதலான பின்னணியுடன் நாகதம்பிரான் வழிபாடு நடைபெறும் ஆலயச் சடங்குகளை உதாரணம் கொண்டு எழுதினால் புள்ளி வழங்கவும்.

ii. விபுலானந்த அடிகள் :-

விபுலானந்த அடிகள் *(1892 – 1947)*

அறிமுகம் :- காலமும் சூழ்நிலையம் *(1892 – 1947)* பிரித்தானிய ஆட்சி.

தாய் பெயர் - கண்ணகியம்மை

தந்தை பெயர் - சாமித்தம்பி

ஊர் - காரைதீவு – மட்டக்களப்பு

ஆசிரியர் - நல்லரெத்தினம், குஞ்சிபாதம், வைத்திலிங்க தேசிகர்.

கற்ற நூல் - கந்தபுராணம், பெரியபுராணம், நைடதம், நன்னூல், பஞ்ச தந்திரம்

கற்ற பாடசாலை – கல்முனை – மெதடிஸ் சென் - மைக்கல்

பயிற்சிப் பாடசாலை – மஹரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை *(1911 – 1917)*

மருதனை தொழில் நுட்பப்பாடசாலை *(1915)*

கல்வித்தரம் - பயிற்றப்பட்ட ஆசிரியர், விஞ்ஞானத் தொழிநுட்பவியலாளர், விஞ்ஞானப் பட்டதாரி (டீளுஊ)

தொழில்கள் - ஆசிரியர் மைக்கல் (மட்) தொழிநுட்பவியலாளர் பட்டதாரி
ஆசிரியர் (யாழ் - சென் பற்றிக்ஸ்)

அதிபர் - யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரி *(1920)*

பேராசிரியர் - அண்ணாமலைப் பல்கலைக் கழகம் *(1931)*
பேராதனைப் பல்கலைக் கழகம் *(1943)*

பத்திரிகை ஆசிரியர் - இராம கிருஷ்ண மிஷன் நிர்வாகத்தின் கீழ் இருந்த பாடசாலைகளும் பின்வந்த பாடசாலைகளும் அடியாரின் முகாமையின் கீழ் வந்தன. இவை வருமாறு

திருகோணமலை - இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் - வைத்தீசுவரன் கல்லூரி

உப்போடை – மட் - சிவானந்தா

இயற்றிய நூல் - மணிமாலை, ஆங்கில வாணி, கணேச பஞ்சாகம், குமரவேல நவமணிமாலை நாச்சியார் நான் மணிமாலை, யாழ்நூல், நடராச வடிவம், கங்கையில் விடுத்த யோலை.

agaram.lk

மாணவர் பரம்பரை – பேரா. செல்வநாயகம், புலவர்மணி நல்லதம்பிப் பிள்ளை, வித்தியானந்தன், சிவசுப்பிரமணியம், சிவகுருநாதச் செட்டி யாழ். பா.வேலுப்பிள்ளை (மட்டக்களப்பு) அம்பிகைபாகன்.

சமூகப்பணி :- அடிமட்ட மக்களின் கல்வி வளர்ச்சியின் பொருட்டு தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் உழைத்தல்.

முத்தி :- *1947*ம் ஆண்டு ஆடித்திங்கள் *19* நாள்

iii. சாங்கியம்

காலம் - கி.பி *5*ம் நூற்றாண்டில் கபிலரால் தோற்றம் பெற்றது.
நூல்கள் - சாங்கிய சூத்திரம்
சாங்கிய காரிகை
பிராமணங்கள் - காண்டல், கருதல், உரை
கோட்பாடு – சாங்கியம் என்பது பூரண அறிவு.
புருடன், பிரகிருதி, முக்குணம், சத்காமிக வாதம்.
சாங்கியத் தத்துவம் - பிரமாணம், சற்காரிய வாதம், புருடன், பிரகிருதி – மாயை, முக்குணம்.

iv. சிவஞானபேதம் - எழுதியவர் பெயர் - மெய்கண்டதேவர்
சூத்திரங்களின் எண்ணிக்கை – *12*
அவதாரம் - *04*
வெண்பா – *81*

☞ சைவசித்தாந்த முதல் நூலாக சிவஞான போதம் போற்றப்படுகின்றது.
சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை ஒழுங்கு முறையில் தருவதால் இது சிறப்பான பதியின் இலக்கணம் ஆன்ம இலக்கணம் பாச இலக்கணம் என்பவற்றைச் சுருக்கிய வடிவில் நிறைவாகக் தருகின்ற வகையில் மெய்கண்டார். தனித்துவம் பெறுகின்றார் அது மட்டுமன்றி பஞ்சாட்சரம், ஆலயச் சிறப்பு குருலிங்க சங்கம் வழிபாடுகளையும், சமய மார்க்கங்களையும் விளக்கி கூறுவது சிறப்பு குருலிங்க சங்கம வழிபாடுகளையும், சமய மார்க்கங்களையும் விளக்கி கூறும் நூல் சிவஞானபோதம் என்றால் மிகையாகாது. இதன் சிறப்பை மேலும் தெளிவுபடுத்தி இதற்கு வழிநூலாக அமைந்த சிவஞானசித்தியார் சிவஞானபோதத்தின் செம்பொருளை விரிவுப்படுத்தித் தருகின்றன.

v. இந்து சமய மரபில் மனித நேயம்

இந்து சமயத்தில் கூறப்படும் உண்மைபேசல், கொல்லாமை, கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை, களவெடுக்காமை. ஆகிய ஐந்தும் மனித நேயத்தின் அடிப்படை அம்சங்களாகும்.

அன்பு, அறம், அகிம்சை, என்பன போற்றப்பட வேண்டியவை. உயிரகளைப் பேணி பாதுகாத்தல், பசிப்பிணியகற்றுதல், ஆதரவற்றோரைப் பராமரித்தல் என்பனவும் மனித நேயச் செயற்பாடுகளாகக் கூறப்பட்டுள்ளன.

மனிதன், காமம், வெகுளி, மயக்கம் இவற்றிலிருந்து விடுபட்டு வாழவேண்டும். எனப்படுகிறது. மேலும் இல்லறத்தில் வாழும் ஒருவன் ஐந்து வகைத் தர்மங்கள் ஆற்ற வேண்டும்.

தானம் செய்தல், துறவிகளைப் பேணல், உணவு கொடுத்தல் ஆகியவற்றை செய்தல் அவசிளம் எனப்படுகிறது. மேலும் இந்த சமயத்தில் ஆலயங்களில் நால்வகை மார்க்கங்களைக் கடைப்பிடிப்பதிலும் மனித நேயம் பின்பற்றப்படுகிறது. ஆலயங்களில் கொடுக்கப்படும் அன்னதானம் மனித நேயத்தின் முக்கிய அம்சமாகும்.

(4 x 5 =20 புள்ளி)

agaram.lk